**திருமங்கலம் நகராட்சி**

**மன்றக் கூட்டப்பொருள்**

**1)**திருமங்கலம் நகராட்சி **2023–24**ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வழங்கல் நிதியின் உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு

**1)**மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2)**அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.286:        பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**2)**நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். **3096/2022**/பி2, நாள்.**20.03.2023**ன் கடிதத்தில் **15**வது மத்திய நிதிக்குழு மானியம் **2022–23** (Untied Grant)ன்கீழ் ரூ.**10.60** இலட்சம் மற்றும் ரூ.**13.40** இலட்சம் மதிப்பீட்டில் முறையே பேவர்பிளாக்சாலை மற்றும் தார்சாலை பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 557/2023/இ1**

**தீர்மானம் எண்.287:        பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**3)**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MA2) துறை அரசாணை (MS) எண்.**145**, நாள்.**14.10.2022**ன் அரசாணையில் திருமஙகலம் நகராட்சி பகுதிகளில் உள்ள **1952** எண்ணிக்கை தெருவிளக்குகளை LED ஆற்றல் மிகு தெரு விளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.**237.72** இலட்சம் மற்றும் **534** எண்ணிக்கை LED ஆற்றல் மிகு தெரு விளக்குகள் புதிதாக அமைப்பதற்கு ரூ.**107.70** இலட்சம் மாநில நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்ட நிதியை இந்நகராட்சிக்கு கடனாக வழஙகுவதுடன், இக்கடனை ஆறு ஆண்டுகளுக்குள் **5** சதவிகித வட்டியுடன் (ஆண்டிற்கு) (5% Per annum) திரும்ப செலுத்துவதற்கு நிபந்தனைகளுக்கு நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி வழஙகப்பட்டதனை தொடர்ந்து (நகர்மன்றத்தீர்மானம் எண். **141**, நாள்.**08.11.2022**) இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம். **30852/2022**/WB நாள்.**04.11.2022**ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. இப்பணிக்கு தலைமை செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களால் **15.11.2022**ல் தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு [illegible]ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் Online மூலம் Hariway Lines Private Limited ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி [illegible] திறக்கப்பட்டு திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படி இரண்டு நிறுவனத்தின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 06[illegible]ல் திறக்கப்பட்டு ஒப்பு திறக்கப்பட்டு ஒப்பு நோக்குபட்டியல் தயார்செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்ததார்பெயர் | ஒப்பந்தப்புள்ளியில்கொடுக்கப்பட்ட விலைவிகிதம் |
|---|---|
| Hariway Lines Private Limited<br>**புதுக்கோட்டை** | **மதிப்பீட்டினைக்காட்டிலும்**<br>**5.15% அதிகம்**(BOQ -I)<br>**[illegible] அதிகம்**(BOQ -II) |
| SABARI Electricals<br>**சென்னை** | **மதிப்பீட்டினைக்காட்டிலும்**<br>**[illegible] அதிகம்**(BOQ -I)<br>**[illegible] அதிகம்**(BOQ -II) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளியிலும் மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதம் Limited, புதுக்கோட்டை நிறுவனத்தின் கூடுதல் விலை விகிதத்தினை மதிப்பீட்டு விலையை விட குறைத்து குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் [illegible] கோரியதில் மேற்படியார் தனது [illegible]ம் தேதிய கடிதத்தில் தர இயலும் என சம்மதக்கடிதம் அளித்துள்ளார்

அதனை தொடர்ந்து இரண்டாவது முறையாக விலைவிகிதத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விலைவிகிதத்தினை விட குறைத்து தருவதற்கு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில் மேற்படியார் தனது [illegible]ம் செய்து தருவதற்கு சம்மதக்கடிதம் அளித்துள்ளார்

ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம்
பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
நகஎண்.1708/2022/இ1

**தீர்மானம் எண்.288:** அனுமதிக்கப்பட்டது.

4)திருமங்கலம் நகராட்சிக்கு 2021–22ம் ஆண்டிற்கு 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதியின் ($15^{th}$ CFC Untied Grant) கீழ் ரூ.58.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி ஏதும் அனுமதிக்கப்படாமல் இருந்து வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31113/2021/CFC-1 நாள்.14.10.2022ல் மேற்காணும் 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதியில் இந்நகர்ப்பகுதியில் 896 எண்ணிக்கை LED ஆற்றல்மிகு தெருவிளக்குகள் புதிதாக அமைக்கும் பணியினை ரூ.58.75 இலட்சம் மதிப்பீட்டில் ($15^{th}$ CFC Garnt – 58.00 lakh + ULB – 0.75 lakh) மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டு இந்நகர்மன்றத்தீர்மானம்எண். 142, நாள்.08.11.2022ல் பணி மேற்கொள்ள தீர்மானம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், மதுரை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண். 116/2022/பி2, நாள்.15.11.2022ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 28.12.2022-ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் Online மூலம் Hariway Lines Private Limited புதுக்கோட்டை, மற்றும் SABARI Electricals சென்னை ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படி இரண்டு நிறுவனத்தின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 06.01.2023-ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில்கொடுக்கப்பட்ட விலைவிகிதம் |
|---|---|
| Hariway Lines Private Limited<br>புதுக்கோட்டை | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>7.30% அதிகம் (BOQ -I)<br>6.16% அதிகம் (BOQ -II) |
| SABARI Electricals<br>சென்னை | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>11.80% அதிகம் (BOQ -I)<br>10.68% அதிகம் (BOQ -II) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளியிலும் மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதம் வழங்கப்பட்டு உள்ள நிலையில், இவ்விரண்டில் குறைவானதும் மதிப்பீட்டினைக் காட்டிலும் 7.30% (BOQ -I), 6.16% (BOQ -II) சதவீதம் கூடுதல் விலைவிகிதம் வழங்ககியுள்ள Hariway Lines Private Limited, புதுக்கோட்டை நிறுவனத்தின் கூடுதல் விலை விகிதத்தினை மதிப்பீட்டு விலையை விட குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 11.01.2023ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75%(BOQ -I), 4.75%(BOQ - II), கூடுதல் விலைவிகிதத்தில் பணி செய்து தர இயலும் என சம்மதக்கடிதம் அளித்துள்ளார்.

அதனை தொடர்ந்து இரண்டாவது முறையாக விலைவிகிதத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட குறைத்து தருவதற்கு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில் மேற்படியார் தனது 25.01.2023 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.01%(BOQ-I), 0.01%(BOQ-II) குறைவாக செய்து தருவதற்கு சம்மதக்கடிதம் அளித்துள்ளார்.

எனவே, Hariway Lines Private Limited, புதுக்கோட்டை நிறுவனத்தின் மூலம் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1766/2022/இ1

**தீர்மானம் எண்.289:** அனுமதிக்கப்பட்டது.

5)மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.256/செ.ம.தொ.அ/2022 நாள்.17.02.2023ன் கடிதத்தில் தமிழ்நாடு அரசு முக்கிய திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 10 அடி உயரம் X 12 அடி அகலம் அளவில் விளம்பரப்பதாகை அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பேருந்து நிலையம் முன்புறம் அரசு திட்டம் குறித்து விளம்பரப்பதாகை நிறுவப்பட்டதற்கு ARAFATH STEELS திண்டுக்கல் நிறுவனத்திற்கு ரூ.24300/– வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 515/2023/இ1**

**தீர்மானம் எண்.290:** **அனுமதிக்கப்பட்டது.**

**6)**திருமஙகலம் நகராட்சி நமக்கு நாமே திட்டம் 2022–23 ன் கீழ் ரூ.8.86 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–26ல் கண்காணிப்பு கேமராக்கள் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு 29.03.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| 1. திரு.ஆர்.பாலமுருகன்<br>ஒப்பந்ததாரர்<br>திருமஙகலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.35 சதவிகிதம் குறைவு |
| 2. திரு.என்.மணிகண்டன்<br>ஒப்பந்ததாரர்<br>திருமஙகலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் 31.61 சதவிகிதம் அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.35 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்ததாரர், திருமஙகலம் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க. எண். 467/2023/இ1**

**தீர்மானம் எண்.291:** **அனுமதிக்கப்பட்டது.**

7)திருமஙகலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் குத்தகைத் தொகை 2017–18ம் ஆண்டிற்கு ஏலம் எடுத்த வகையில் ஏலத் தொகையை செலுத்தாத திரு.ராஜா, த/பெ.அய்யாவுத்தேவர் என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு ஆவணஙகள் தட்டச்சு செய்து நீதிமன்றக் கட்டணம் செலுத்திய வகைக்கு திரு.எஸ்.ராமச்சந்திரன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.18695/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.கு**

பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் செலுத்தாத வகைக்கு திரு.ராஜா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கிற்குரிய கட்டணம் ரூ.18695/– மட்டும் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2513/2015/அ2

**தீர்மானம் எண்.292: அனுமதிக்கப்பட்டது.**

8)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் வார்டு எண். 21,22,23,24,25,26,27க்குட்பட்ட பகுதியில் துப்புரவுப் பணி மேற்கொள்ள ஒப்பந்தகாலம் 31.03.2023 அன்றுடன் முடிவடைவதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரியது இறுதி செய்ய காலதாமதமாவதால் தங்களது நிறுவனத்தின் மூலம் புதிய நிறுவனம் தேர்ந்தெடுத்து பணிகள் ஒப்படைக்கும் வரை ஜெய் ஷீரடி சாய் மேன்பவர் ஏஜென்ஸி நிறுவனமே அதே விலைவிகிதத்தில் பணிபுரிய காலநீட்டிப்பு செய்ய நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.293: அனுமதிக்கப்பட்டது.**

9)திருமஙகலம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பின்புறமுள்ள கட்டணக் கழிப்பறை கட்டணம் வசூல் செய்யும் குத்தகைத் தொகை 2018–19ம் ஆண்டு முதல் 2021–22 ஆம் ஆண்டு வரை குத்தகை கட்டணடம் செலுத்தாத வகைக்கு திரு.வி.பால்பாண்டி, த/பெ.வேலுச்சாமி என்பவர் ஏலம் எடுத்த தொகையை செலுத்தாத காண வகைக்கு திரு.வி.பால்பாண்டி என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு ஆவணஙகள் தட்டச்சு செய்து நீதிமன்றக் கட்டணம் செலுத்திய வகைக்கு திரு.எஸ்.ராமச்சந்திரன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.16435/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.கு**

அலுவலகம் பின்புறமுள்ள கட்டணக் கழிப்பறைக்கு உரிய குத்தகை கட்டணம் செலுத்தாத வகைக்கு திரு.வி.பால்பாண்டி என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கிற்குரிய கட்டணம் ரூ.16435/– மட்டும் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3022/2017/அ2

**தீர்மானம் எண்.294: அனுமதிக்கப்பட்டது.**

**10)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீரினால் பரவும் டெங்கு தடுப்புப் பணிகள் தனியார் மூலம் **35** துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தகாலம் **31.03.2023** அன்றுடன் முடிவடைவதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரியது இறுதி முடிவு செய்ய காலதாமதமாவதால் புதிய நிறுவனம் தேர்ந்தெடுத்து பணிகள் ஒப்படைக்கும் வரை ஏற்கனவே உள்ள ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட் நிறுவனமே அதே விலைவிகிதத்தில் பணிபுரிய காலநீட்டிப்பு செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் அதே நிறுவனத்திடம் ஏற்கனவே உத்தரவிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அதே ஊதிய விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை சப்ளை செய்து பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

**2023–24**ம் ஆண்டு தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் **35** டெங்கு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் வரை ஏற்கனவே உள்ள நிபந்தனைகள் மற்றும் அதே ஊதிய விகிதத்தில் பணி செய்ய நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.295: அனுமதிக்கப்பட்டது.**

**11)** திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் வார்டு எண். **6,7,8,9,14**க்குட்பட்ட பகுதியில் **80** துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி துப்புரவுப் பணியாளர்களின் ஒப்பந்தகாலம் **31.03.2023** அன்றுடன் முடிவடைவதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரியது இறுதி முடிவு செய்ய காலதாமதமாவதால் புதிய நிறுவனம் தேர்ந்தெடுத்து பணிகள் ஒப்படைக்கும் வரை ஏற்கனவே உள்ள ஏ.வி.எம். சர்வீஸ் பாய்ண்ட் நிறுவனமே அதே விலைவிகிதத்தில் பணிபுரிய காலநீட்டிப்பு செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். எனவே ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் அதே நிறுவனத்திடம் ஏற்கனவே உத்தரவிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அதே ஊதிய விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை சப்ளை செய்து பணிகளை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு

**2023–24**ம் ஆண்டு தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் **80** தனியார் துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் வரை ஏற்கனவே உள்ள நிபந்தனைகள் மற்றும் அதே ஊதிய விகிதத்தில் பணி செய்ய நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.296: அனுமதிக்கப்பட்டது.**

**12)**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.18274/2022/CFC-1, நாள்.21.03.2023ன் கடிதத்தில் திருமங்கலம் நகராட்சி **15**வது நிதிக்குழு மானியம் (Tied Grant) **2022–23**ம் நிதியாண்டின் கீழ் ரூ.**21.90** இலட்சம் மதிப்பீட்டில் மூன்று எண்ணிக்கை இலகு ரக வானஙகள் (LCV) வாங்கி கொள்ள நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. இத்திட்டநிதியினை விட கூடுதலாக ஏற்படும் செலவினம் ரூ.**1.21** இலட்சம் பொதுநிதியில் இருந்து ஈடுசெய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 557/2023/இ1**

**தீர்மானம் எண்.297: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**13)** திருமங்கலம் நகராட்சியில் CWSS மற்றும் வைகை குடிநீர் திட்டத்தின் வாயிலாக தினசரி சுமார் 46.00 இலட்சம் குடிநீர் பெறப்பட்டு இந்நகர் பகுதியில் உள்ள 14 எண்ணிக்கை OHTயில் நீரேற்றம் செய்யப்பட்டு 96.11 கீ.மீ நீளமுள்ள பகிர்மான குழாய் வழியாக 7300 குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், நீர் அழுத்தம், நீண்ட கால பயன்பாடு காரணமாக, அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகும் நிலையில் பொதுமக்களுக்கு குடிநீர் வழஙகாமல் சுகாதார கேடு ஏற்படும் நிலையில் இதனை சரி செய்வதற்கு நிரந்தர பணியாட்கள் இல்லை.

மேலும் சோழவந்தான் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் இருந்து இந்நகர் பகுதிக்கு குடிநீர் கொண்டு வரும் பிரதான குழாய் (P'main) களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை சரி செய்வதற்கும் நிரந்தர பணியாட்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் உடைப்புகளை சரி செய்வதற்கு தனியார் மூலம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்க்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10,00,000/– இப்பணியினை 2023–24ம் ஆண்டிற்கான குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்க்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 888/2023/இ1**

**<u>தீர்மானம் எண்.298:</u>** **<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**14)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.32945/2022/EA2–SWM, நாள்.10.01.2023 ன் கடிதத்தில் திருமஙகலம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் தனியார் மூலம் குப்பைகளை அகற்றும் பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி வழஙகப்பட்டதனை தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.377.88 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பொதுநிதி மற்றும் 15வது மத்தியநிதிக்குழு நிதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.227, நாள்.27.01.2023ல் அனுமதிக்கப்பட்டது.

இப்பணிக்கு 24.03.2023ம் தேதி Online மூலம் இரு உறை முறையில் நான்கு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் 1.M/s. Ourland Engineering works pvt Ltd , Chennai, 2.M/s.Jai Shiradi Sai Man power Agency, Madurai, 3.M/s.Sriram Labour Contract, Madurai, மற்றும் 4.M/s.Pranav Security & Man power service, Madurai ஆகியோரின் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Ourland Engineering works pvt Ltd , Chennai ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகாண் நிபந்தனைகளை நிறைவு செய்வதால் அன்னாரது விலைவிகித ஒப்பந்தப்புள்ளி 10.04.2023ல் திறக்கப்பட்டது விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| M/s. Ourland Engineering works pvt Ltd,<br>ஒப்பந்ததாரர், சென்னை | மதிப்பீட்டு<br>விலைவிகிதம்<br>(ரூ.4569/MT) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டின் விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், விலைவிகிதத்தினை மேலும் குறைத்துதரக்கோரி சம்மதக்கடிதம் கோரப்பட்டதில் 12.04.2023ம் தேதிய ஒப்பந்ததாரரின் சம்மதக்கடிதத்தில் மதிப்பீட்டு விலையை விட 0.02 சதவிகிதம் குறைவாக (ரூ.4568/MT) பணி செய்து தர இயலும் என கடிதம் வழங்கப்பட்டுள்ளது இதனை ஏற்று இப்பணியினை M/s. Ourland Engineering works pvt Ltd, சென்னை மூலம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 192/2023/அ2**

**தீர்மானம் எண்.299:** **அனுமதிக்கப்பட்டது.**

15)நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்–1, நாள்.10.03.2023ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘‘அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும்’’ என சமூகநலத்துறையின் மானிய கோரிக்கையின் அறிவிப்பின்படி உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக நகராட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்களுக்கான கட்டடம் கட்டி முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண்–9 வேங்கடசமுத்திரம் பழைய சர்வே எண்–3/4, வார்டு–பி, பிளாக்–1ல் ரூ.27.00இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சமையல்கூடத்திற்கான கட்டடம் கட்டுவதற்கு இப்பணிக்கான நிதியினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.263, நாள்.31.03.2023ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 11.04.2023ம் தேதி Online மூலம் இரு உறை முறையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.ஆர்.பாலமுருகன், ஒப்பந்ததாரர், திருப்பரங்குன்றம் மற்றும் திரு.என்.மணிகண்டன், ஒப்பந்ததாரர், திருமங்கலம் ஆகியோரின் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.பாலமுருகன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதிகாண் நிபந்தனைகளை நிறைவு செய்வதால் அன்னாரது விலைவிகித ஒப்பந்தப்புள்ளி 15.04.2023ல் திறக்கப்பட்டது விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| திரு.ஆர்.பாலமுருகன், ஒப்பந்ததாரர்,<br>திருப்பரங்குன்றம் | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.01 சதவிகிதம் குறைவு |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டின் விலைவிகிதத்தினை காட்டிலும் குறைவான மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஆர்.பாலமுருகன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 714/2023/இ1**

**தீர்மானம் எண்.300:** **அனுமதிக்கப்பட்டது.**

**16)** திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் 159 எண்ணிக்கை சிறுமின்விசை பம்ப்களில் இருந்து சிண்டெக்ஸ் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்பட்டு அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதற்கான பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.ரூ.10,00,000/– இப்பணியினை 2023–24ம் ஆண்டிற்கான குடிநீர் வழஙகல் நிதியிலிருந்து மேற்க்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.301: அனுமதிக்கப்பட்டது.**

**17)** திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN-58-AZ-6122, TN-58-AZ-6123, TN-58-AZ-6184 ஆகிய மூன்று குப்பை வண்டிக்கு சாலை வரி 30.04.2023ல் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு 2023–24ம் ஆண்டுகளுக்கு உரிய சாலை வரி செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு. (உத்தேச செலவு ரூ.24000/–)

அ.கு

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனங்களுக்கு 2023–24ம் ஆண்டுகளுக்கு உரிய சாலை வரி செலுத்த நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.873/2023/அ2

**தீர்மானம் எண்.302: அனுமதிக்கப்பட்டது.**

**18)** திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 58-AZ-6122 குப்பை வண்டிக்கு தகுதிச்சான்று 2/2023ல் முடிவடைந்துவிட்டது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறும்பொருட்டு கீழ்க்கண்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

1)ஆயில் சர்வீஸ்
2)நான்கு வீல் கிரீஸ் பேக்கிங்
3)பிரேக் வேலைகள்
4)கிளச் வேலைகள்
5)கிரவுன் வேலைகள்
6)ஹைட்ராலிக் வேலைகள்
7)செல்ப் மோட்டார் வேலைகள்
8)பெயிண்டிங் வேலைகள்

மேற்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று பெறும்பொருட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி பழுது நீக்கம் செய்ய உத்தரவிட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.872/2023/அ2

**தீர்மானம் எண்.303: அனுமதிக்கப்பட்டது.**

**19)** திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 58-AZ-6184 குப்பை வண்டிக்கு தகுதிச்சான்று **30.06.2023**ல் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறும்பொருட்டு கீழ்க்கண்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

**1)**ஆயில் சர்வீஸ்
**2)**நான்கு வீல் கிரீஸ் பேக்கிங்
**3)**பிரேக் வேலைகள்
**4)**கிளச் வேலைகள்
**5)**ஹைட்ராலிக் வேலைகள்
**6)**செல்ப் மோட்டார் வேலைகள்
**7)**பெயிண்டிங் வேலைகள்
**8)**டிங்கர் வேலைகள்

மேற்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று பெறும்பொருட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி பழுது நீக்கம் செய்ய உத்தரவிட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.871/2023/அ2

**தீர்மானம் எண்.304:** **அனுமதிக்கப்பட்டது.**

**20)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.**18274/2022/** CFC1 நாள்.**22.02.2023**ன் கடிதத்தில் திருமங்கலம் நகராட்சிக்கு **15**வது மத்திய நிதிக்குழு மானிய நிதி **2022-23** Tied Grant ன் கீழ் ரூ.**64.60**இலட்சம் மதிப்பீட்டில் **6000** லிட்டர் கழிவுநீர் அகற்றுதல் உறிஞ்சு வாகனம் வாங்கி கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து இப்பணிக்கு **11.04.2023**ம் தேதி Online மூலம் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதற்கான தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் **1**. M/s. Krystal Motors pvt Ltd , Salem, 2.M/s.Innovative Engineering, Salem ஆகியோரின் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Krystal Motors pvt Ltd , Salem ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப தகுதிகாண் நிபந்தனைகளை நிறைவு செய்வதால் அன்னாரது விலைவிகித ஒப்பந்தப்புள்ளி **24.04.2023**ல் திறக்கப்பட்டது விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| M/s. Krystal Motors pvt Ltd,<br>ஒப்பந்ததாரர்,<br>சென்னை | மதிப்பீட்டு விலையை<br>விட **0.02** சதவிகிதம்<br>குறைவு<br>(ரூ.**64,59,000/–**) |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட **0.02** சதவிகிதம் குறைவாக உள்ளதால் இதனை ஏற்று இப்பணியினை M/s. Krystal Motors pvt Ltd சேலம் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**ந.க.எண். 624/2023/இ1**

**தீர்மானம் எண்.305:** **பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**21)** 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி **2022–23** Tied Grant ன் கீழ் ரூ.**64.60** இலட்சம் மதிப்பீட்டில் Jetting Machine கொள்முதல் செய்யும் பணிக்கு **07.04.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி வழங்க கோரிய அறிவிப்பினை தினசெய்தி தமிழ் நாளிதழ் மற்றும் Business standard ஆஙகில நாளிதழில் **23.03.2023**ம் தேதியன்று பிரசுரம் செய்து தர Shrestha Communication Chennai நிறுவனத்திற்கு செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.**1842**/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/**2023**, நாள்.**21.03.2023**ம் தேதிய கடிதத்தின் அறிவுறுத்தலின் படி விளம்பரம் செய்ததற்கான விளம்பர கட்டணம் ரூ.**24,780**/–னை வழஙக கோரி Invoice No : C/-22-23-0690, நாள்.**29.03.2023**ன் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. இத்தொகையினை Shrestha Communication Chennai நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 624/2023/இ1**

**தீர்மானம் எண்.306:** **அனுமதிக்கப்பட்டது.**

**22)** திருமஙகலம் நகராட்சிக்கான தற்போதைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்நகராட்சிக்கான பேருந்து நிலைய கடை வாடகைதாரர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்கள். WP (MD) 3985 முதல் WP (MD) 3991 வரை மற்றும் WP (MD) 3861,3862,3864 முதல் 3867 வரை மற்றும் **3869** உள்ள வழக்குகளில் இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆஜராகி வழக்கை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**1,40,000**/– வழஙக நகராட்சி வழக்கறிஞர் திரு.வி.ஆஸ்டின் அவர்களால் கோரப்பட்டுள்ளது. இத்தொகையை நகராட்சி வழக்கறிஞர்க்கு வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 844/2023/இ1**

**தீர்மானம் எண்.307:** **அனுமதிக்கப்பட்டது.**

23)திருமங்கலம் நகராட்சியில் (NSMT– நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம்) பொதுநிதியின் கீழ் 2022–23க்கு ரூ.47.60 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட நான்கு எண்ணிக்கை சாலைப் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | நீளம் மீ. | அகலம் மீ. | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5ல் முகமதுஷாபுரம் 4வது தெருவில் (ரதிராஜன் நகர்) தார்சாலை புதுப்பித்தல் பணி 117 005 R 568 | 0.898 | 4.00 | 39.00 |
| 2 | வார்டு எண்.5 முகமதுஷாபுரம் 4வது தெருவில் (கிழக்கு குறுக்குத் தெரு–1) மண் சாலையினை பேவர்பிளாக் சாலையாக மாற்றம் செய்தல் பணி 117 005 L 078 | 0.045 | 3.00 | 2.25 |
| 3 | வார்டு எண்.5 முகமதுஷாபுரம் 4வது தெருவில் (ஓடை அருகில்) மண் சாலையினை பேவர்பிளாக் சாலையாக மாற்றம் செய்தல் பணி 117 005 L 079 | 0.090 | 3.00 | 3.80 |
| 4 | வார்டு எண்.5 முகமதுஷாபுரம் 4வது தெருவில் (கிழக்கு குறுக்குத் தெரு–2) மண் சாலையினை பேவர்பிளாக் சாலையாக மாற்றம் செய்தல் பணி 117 005 L 080 | 0.060 | 3.00 | 2.55 |
| | **மொத்தம்** | **1.093** | **––** | **47.60** |

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 776/2023/இ1**

**தீர்மானம் எண்.308:** அனுமதிக்கப்பட்டது.

24)திருமங்கலம் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Untied Grant) 2022–23 ன் கீழ் ரூ.13.40 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–2 செங்குளம் கிழக்கு தெரு–9ல் தார்சாலை அமைத்தல் பணிக்கு 12.04.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

1. M/s.V.B.கன்ஸ்ட்ரக்ஸன்,
   ஒப்பந்ததாரர்
   அருப்புக்கோட்டை — மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.08 சதவிகிதம் குறைவு

2. திரு.ஆர்.பாலமுருகன்
   ஒப்பந்ததாரர்
   திருமங்கலம் — மதிப்பீட்டினைக் காட்டிலும் 5.58 சதவிகிதம் அதிகம்

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.08 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s.V.B.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளலாம். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். 557/2023/இ1**

**தீர்மானம் எண்.309: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

25)திருமங்கலம் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Untied Grant) 2022–23 ன் கீழ் ரூ.10.60 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–6 இராஜாஜி தெரு–12ல் பேவர்பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு 12.04.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

1. M/s.V.B.கன்ஸ்ட்ரக்ஸன்,
   ஒப்பந்ததாரர்
   அருப்புக்கோட்டை — மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.01 சதவிகிதம் குறைவு

2. திரு.ஆர்.பாலமுருகன்
   ஒப்பந்ததாரர்
   திருமங்கலம் — மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.08 சதவிகிதம் அதிகம்

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.01 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s.V.B.கன்ஸ்ட்ரக்ஸன், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளலாம். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். 557/2023/இ1**

**தீர்மானம் எண்.310: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**26)** திருமங்கலம் நகராட்சி நுண்உரக்கூடத்தில் உற்பத்தியாகும் இயற்கை உரங்களை ''செழிப்பு'' என்ற பிராண்ட் பெயரில் விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். அவ்வாறு ''செழிப்பு'' என்ற பெயரில் விற்பனை செய்ய "Wholesale Marketting Licence" பெற விற்பனை உரிமம் பெறவும் ''Assistant Director of Agriculture (IQC) O/o.Joint Director of Agriculture" என்ற அலுவலக பெயரில் ரூ.2250/– இ–சலான் எடுத்து ஏ1 படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்ப நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை வழங்கலாம்.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.311: அனுமதிக்கப்பட்டது.**

**27)** நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2022–23** பொதுநிதியின் கீழ் திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–**5** முகமதுஷாபுரம் **4**வது தெரு (ஓடை அருகில்) ரூ.**3.80** இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு **26.04.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| 1. M/s.Head way Construction Madurai | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.10** சதவிகிதம் குறைவு |
| 2. M/s.SPS Brother's & Co திருமங்கலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.001** சதவிகிதம் குறைவு |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.10** சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s.Head way Construction, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 776/2023/இ1**

**தீர்மானம் எண்.312: அனுமதிக்கப்பட்டது.**

**28)** நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2022–23** பொதுநிதியின் கீழ் திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–**5** முகமதுஷாபுரம் **4**வது தெரு (கிழக்கு குறுக்கு தெரு–**2**) ரூ.**2.55** இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு **26.04.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| 1. M/s.Head way Construction Madurai | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.09** சதவிகிதம் குறைவு |
| 2. M/s.SPS Brother's & Co திருமங்கலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.001** சதவிகிதம் குறைவு |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.09** சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s.Head way Construction, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 776/2023/இ1**

**தீர்மானம் எண்.313: அனுமதிக்கப்பட்டது.**

**29)** நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் **2022–23** பொதுநிதியின் கீழ் திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–5 முகமதுஷாபுரம் 4வது தெரு (கிழக்கு குறுக்கு தெரு–1) ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக்சாலை அமைத்தல் பணிக்கு **26.04.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.

| | |
|---|---|
| 1. M/s.Head way Construction Madurai | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.10** சதவிகிதம் குறைவு |
| 2. M/s.SPS Brother's & Co திருமங்கலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.001** சதவிகிதம் குறைவு |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் **0.10** சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s.Head way Construction, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 776/2023/இ1**

**தீர்மானம் எண்.314: அனுமதிக்கப்பட்டது.**

**30)** திருமங்கலம் நகராட்சி பகுதியில் NSMT 2022–23 பொதுநிதியின் கீழ் வார்டு எண்–5 முகமதுஷாபுரம் 4வது தெருவில் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பித்தல் பணியினை மேற்கொள்வதற்கு மண்டலசெயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், மதுரை அவர்களின் செயல் முறைக்கடிதம் ந.க.எண்.850/2023/பி2, நாள்.10.04.2023ல் தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டு இப்பணிக்கு **26.04.2023**ம் தேதி Online மூலம் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதற்கான தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் **1.** M/s. Headway Construction, Madurai 2.M/s.Sri Sai Builders, Tirumangalam ஆகியோரின் தொழில்நுட்ப தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதிகாண் நிபந்தனைகளை நிறைவு செய்வதால் இருவரின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி **02.05.2023**ல் திறக்கப்பட்டது விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. M/s.Head way Construction ஒப்பந்ததாரர், மதுரை | மதிப்பீட்டு விலையை விட **0.21** சதவிகிதம் குறைவு |
| 2.M/s.SPS Brother's & Co ஒப்பந்ததாரர், திருமங்கலம் | மதிப்பீட்டு விலைக்கு சமம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையை விட **0.21** சதவிகிதம் குறைவாக விலைவிகித ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Head way Construction மதுரை ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னார் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.**ந.க.எண். 776/2023/இ1**

**தீர்மானம் எண்.315: அனுமதிக்கப்பட்டது.**

**31)** மனுதாரர் என்.எஸ்.கே.ஞானகுரு 23.03.2023ம் தேதிய விண்ணப்ப மனு மற்றும் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.5287/2022/SWP-GYC12YSU-ன்படி திருமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடகரை கிராமம், வார்டு–இ, பிளாக்–IX, புதிய டவுன் சர்வே எண்.2/1ஏ-ல் 2.295 ஏக்கர் (9300.00 சதுரமீட்டர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல்/ திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட உத்தரவு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம.உ.தி.கு.எண்.27/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், திட்ட அனுமதி எண்.27/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு**

மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டம் – திருமங்கலம் நகராட்சி – வடகரை கிராமம், வார்டு–இ, பிளாக்–IX, புதிய டவுன் சர்வே எண்.2/1ஏ-ல் 2.295 ஏக்கர் (9300.00 சதுரமீட்டர்)

| விபரம் | பரப்பளவு விழுக்காடு |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 2.295 ஏக்கர் (9300.00 சதுரமீட்டர்) |
| ஒதுக்கிய மனைகள் | 54 மனைகள் |
| **பொது ஒதுக்கீடு** | |
| 1)உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு தானமாக ஒப்படைக்கப்பட்டது | 32.07 ச.மீ. (0.51) |
| 2) மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு | 2962.00 ச.மீ. |
| 3)தமிழ்நாடு மின் உற்பத்தி ஒதுக்கீடு | 34.45 ச.மீ (0.54) |
| **விற்பனைக்குரியவை**<br>EWS மனைகளின் பரப்பு மனை எண்கள் | –– |

மேலும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவு (ம.வ./ம.உ.தி.கு.எண்.27/2023) வரைபடத்தின்படி உள்ளாட்சிக்கான பொது உபயோகம் 32.07 ச.மீ., மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 2962.00 ச.மீ. ஆகிய இடங்களை தானப் பத்திரமாக திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு (ஆவண எண்.11870/2022 மற்றும் 11872/2022) பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தான ஆவணங்களை மன்றம் ஏற்கலாம். மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள அணுகுசாலையினை மனுதாரர் தார்சாலையாக அமைக்கப்பட்டு புகைப்பட நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அ.கு**

1) உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை, மதுரை மாவட்டம் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி ஒப்புதல் அளிக்கலாம்.

2) நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அடிப்படை கட்டமைப்பு கட்டணங்கள் அனைத்தும் கணக்கீடு செய்து தொகையினை மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பின்பு இறுதியான அனுமதி வழங்க மன்றம் இசைவு தெரிவிக்கலாம்.

**தீர்மானம் எண்.316: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**32)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.3) துறை அரசாணை (D) எண்.192, நாள்.31.03.2023ன் அரசாணையில் திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 6 எண்ணிக்கை தார் சாலைகளை 0.994 கி.மீ நீளத்திற்கு புதுப்பித்தல் பணிக்கு ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டிற்கும் மற்றும் 35 எண்ணிக்கை சிமெண்ட் சாலைகளை 3.823 கி.மீ நீளத்திற்கு புதுப்பித்தல் பணிக்கு ரூ.123.00 இலட்சம் மதிப்பீட்டிற்கும் ஆக மொத்தம் ரூ.152.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **ந.க.எண். 779/2023/இ1**

**தீர்மானம் எண்.317: பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

33)திருமங்கலம் நகராட்சி வார்டு எண்—14 ஜவஹர் நகர் 4வது தெருவில் அடிகுழாய் பழுதாகி இயக்க முடியாமல் உள்ளது. அதனை சீரமைத்து அவ்விடத்தில் சிறுமின்விசை பம்ப் பொருத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.ரூ.1,40,000/— ஆகும். இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.318: அனுமதிக்கப்பட்டது.**

34) திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை மற்றும் ஆடுஅடிக்கும் தொட்டி அமைந்துள்ள இடம் அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் கோயிலுக்கு பாத்தியப்பட்டது என கோவில் நிர்வாகத்தால் தொடரப்பட்ட வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண்.91/2023ன்படி நடைபெற்று மேற்படி வழக்கின் தீர்ப்பு 21.02.2023ல் நகராட்சிக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அரசு வழக்கறிஞரிடம் கருத்துரு கோரிய வகைக்கு ரூ.5600/— மட்டும் (வழக்கறிஞர் கட்டணம் மற்றும் தீர்ப்பு நகல் ஜெராக்ஸ், கருத்துரு தட்டச்சு கூலி உட்பட) வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அ.கு**

அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை அங்கீகரிக்கலாம். வழக்கறிஞர் கட்டணம் ரூ.3000/— மற்றும் இதர செலவுகள் ரூ.2600/— மட்டும் செலவு மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.698/2022/அ2.

**தீர்மானம் எண்.319: அனுமதிக்கப்பட்டது.**

**35)** திருமங்கலம் நகராட்சி பொது சுகாதார பணியின்கீழ் விருதுநகர்ரோடு, மதுரை ரோடு ஆகிய மெயின் சாலையில் உள்ள சாக்கடைகளில் மணல் அதிகஅளவு சேர்ந்து கழிவுநீர் செல்ல இயலாத நிலையில் தற்போது அலுவலகத்தில் உள்ள ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் மண் அள்ளும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியின்போது சாக்கடைகளில் தேஙகி இருந்த மணல் மற்றும் இதர கழிவுகள் எடுத்து சாலைகளின் ஓரஙகளில் கொட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. மணல் அதிக அளவில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளதால் பொது சுகாதார வாகனஙகளைக் கொண்டு அப்புறப்படுத்த இயலாத நிலை உள்ளதால், தினசரி வாடகை அடிப்படையில் இரண்டு டிராக்டர்கள் தனியார் மூலம் எடுத்து பணி செய்ய வேண்டிய அவசியம் உள்ளதாக துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் 29.03.2023ம் தேதி அறிக்கை செய்துள்ளனர். எனவே தனியார் மூலம் இரண்டு டிராக்டர்கள் வாடகை அடிப்படையில் எடுத்து மணல் அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு. (உத்தேச செலவு ரூ.2.50 இலட்சம்)

**அ.கு**

1)பொது சுகாதார அவசர அவசியம் கருதி மெயின் சாலைகளில் உள்ள சாக்கடையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மணல் மற்றும் கழிவுகளை தனியார் டிராக்டர் மூலம் வாடகை அடிப்படையில் பயன்படுத்தி அகற்ற மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவண்ணம் மணல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள உத்தரவிட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.758/2023/அ2

**தீர்மானம் எண்.320: அனுமதிக்கப்பட்டது.**

36)திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–23க்கு உட்பட்ட செம்மான் கோவில் சந்து மற்றும் பி.டிராஜன் தெருவில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைக்காலஙகளில் கழிவுநீர் வெளியேறுவதற்கு வழிவகை இல்லாமல் சாலையில் தேஙகி பொதுசுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. இதனை சரிசெய்வது அவசியம் என்ற நிலையில் அவ்விடத்தில் உள்ள மழைநீர் கால்வாய் சீரமைத்தல் பணியை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.ரூ.6.00 இலட்சம் ஆகும். இப்பணியினை வருவாய்நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.321: அனுமதிக்கப்பட்டது.**

37)திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–2 செஙகுளம் கிழக்கு 10வது தெருவில் மழைநீர் கால்வாய் சேதமடைந்து பொதுசுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் அத்தெருவில் உள்ள பேவர்பிளாக் சாலை பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் இதனை சீரமைப்பதற்கான பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.ரூ.6.00 இலட்சம் ஆகும். இப்பணியினை வருவாய்நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.322: அனுமதிக்கப்பட்டது.**

38)திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–27 ஆறுமுகம் வடக்குத் தெருவில் மழைநீர் கால்வாய் சேதமடைந்து பொதுசுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. இதனை சீரமைப்பதற்கான பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.ரூ.3.00 இலட்சம் ஆகும். இப்பணியினை வருவாய்நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.323: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) மு.ரம்யா,**
**நகர்மன்றத் தலைவர்,**
**திருமங்கலம் நகராட்சி.**

**/உண்மை நகல் /**

**ஆணையாளர்,**
**திருமங்கலம் நகராட்சி.**